உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

18 MAR 19
MADRAS

திருமயிலை அறுபத்துமூவர்

உற்சவவைபவச் சுருக்கமும்

பூம்பாவையர் சரித்திரமும்

ஷீஜாக்ஷரவர்ணமாலிகா ஸ்தோத்ரமும்,

பிரதோஷமகிமையும்,

அடங்கியிருக்கின்றது,

இஃது

திருநாவுக்கரசுசுவாமிகள் தண்ணீர்ப்பந்தல்

திருத்தொண்டுசபையாரால்

சென்னை - சூளை,

ஆதிகணபதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

—*—

நெ, 103, பாப்பையர் சந்து சூளை - மதராஸ்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமயிலை அறுபத்துமூவர்

உற்சவவைபவச்சுருக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
REGISTERED
18 MAR 1911
MADRAS.

பூம்பாவையார் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்,

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலமுறை யிறையே.

2588
922.945

திருச்சிற்றம்பலம்.

நங்கடம்பனை பெற்றவள்பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக்கோயிலான்
றன்கடன்னடி யேனையுந்தாங்குத
லென்கடன்பணி செய்துகிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

சமரசூரபன் மாவைத்தடிந்தவேற்
குமரன்றாதைநற் கோழம்பமேவிய
அமரர்கோவினுக் கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகம தாளுடையார்களே.

திருச்சிற்றம்பலம்.

சென்னையின் தென்பால் சுமார் ஐந்து கடிகைதூரத்தில் பாலிநதிக்கரையின் வடபாலாய், தொண்டைநாட்டிற்கு நடுநாயகமாகி, சகல வளப்பங்களும் நிறைந்து, திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்று, என்பு பெண்ணாக உருப்பெற்றெழுந்த வைபவக்காட்சியுடன்விளங்கும் திருமயிலைத்தலத்திற்கு, சோமுக னென்பவன் வேதங்களை அபகரித்துக் கொண்டபடியால் அக்குற்றம் நீங்கும்படி வேதங்களாற் பூசிக்கப்பெற்று "வேதபுரி" என்றும். வாமனவதாரத்தாற் சுக்கிரபகவான் தன்கண்ணையிழந்து பூசிக்கப்பெற்று "சுக்கிரபுரி" என்றும், ஸ்ரீ

குமாரக்கடவுள் பூசிக்கப்பெற்று குமாரபுரி என்றும், பிரமன் ஐந்து சிரங்களில் நடுத்தலையைச்சிவபிரான் கிள்ளித் தனது திருக்கரத்தில் ஏந்தியருள. அதுகண்டபிரமன் தன்குற்றம் நீங்கும்பொருட்டுப் பூசிக்கப்பெற்று "கபாலிநகரம்" என்றும், அம்மையார் மயிலாய்ச்சென்று புன்னைமரத்தடியில் பூசிக்கப்பெற்றுத் "திருமயிலை" என்றும் காரணத்திருநாமங்கள் போந்த திருமயிலாப்பூரில் வைசியர்குலத்தில், சிவபக்தி அடியார் பத்திகளிற் சிறந்தவரும், பரசமயங்களைப்பாற்றல்வேண்டும் என்னும் சிந்தையுள்ளவரும், பெருஞ்செல்வரும் ஆகிய சிவநேசச்செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தனர் அவர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஞானப்பால் உண்டமையும், உலகம்உய்யும் பொருட்டுத்திருப்பதிகங்களிலே ஆருகதத்தையும் பௌத்தத்தையும் இழித்துரைத்தமையும் சிவனடியார்கள்சொல்லக் கேள்வியுற்று, மனமிகமகிழ்ந்து, அவருடைய திருவடிகளிலே பேரன்புடையராகி, அல்லும் பகலும் அவருடைய திருவருட்டிறங்களையே பேசல் கேட்டல் ஆகிய தொழிலினராயினர் அவர் பெருஞ்செல்வமும் கீர்த்தியும் உடையராயினும் பிள்ளைப்பேறு இன்மையால் மிக்க கவலையுற்று, சிவபூசை அடியார் பூசைகள் செய்து கபாலீசர் திருவருளால் ஒரு பெண்பிள்ளையைப்பெற்றார் அப்பெண் செந்தாமரையாளாகிய இலக்குமிபோல மகா சௌந்தரியம் உடையவளாயிருந்தாள், அவளுக்குப் பூம்பாவையென்னும் பெயர்தரித்தார் அம்மகட்குப் பெதும்பைப்பருவம் வந்தபின் தந்தையார் தன்மகளின் குணாதிசயங்களைக்கண்டு வியப்புற்றுமனமகிழ்ந்தார் அந்நாளிலே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாண்டியநாட்டிற்சென்று செய்தருளிய திருவருட்டிறங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்கள்வந்து சிவநேசருக்குச்சொன்னார்கள். சிவநேசர் அவற்றைக்கேட்டு மனமகிழ்ந்து, அவர்கள் எல்லாருக்கும் அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து, ஆளுடையபிள்ளையாரைத் திக்குநோக்கி நமஸ்கரித்து, எழுந்துநின்று தமமுடைய சுற்றத்தார்யாவரும் கேட்கும்படி, அடியேன்பெற்ற புத்திரியாகிய பூமபாவையையும என் திரவியம் அனைத்தையும எண்ணையும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளுக்குக் கொடுத்துவிட்டேன் என்று சொல்லி ஆநந்தம் அடைந்தார். இது இங்ஙனமாக ஒருநாள்பூம்பாவை சேடியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பூஞ்சோலையிற் சென்று புட்பங்கொய்யும்பொழுது, ஒரு பாம்பு புட்பக்கொடியிலே மறைந்துவந்து, அவளுடைய விரலிலே காளி காளாத்திரி யமன் யமதூதி யென்னும் நாலுதந்தங்களும் எலும்பிலே தாக்கக்கடித்து, நஞ்சைஉகுத்து,

மேலே படத்தைவிரித்து நின்றடி அடைக்கிற்று. பூம்பாவை மயங்கி விழ சேடியர்கள் நடுநடுங்கி அவளைத்தாங்கி கன்னிமாடத்தினுள்ளே கொண்டுபோனார்கள். சிவநேசர் சுற்றத்தாரோடு மனங்கலங்கி அழுதார். சிறந்த வைத்தியர்கள் அனேகர் தனித்தனியே மந்திரதியான பாவனஞ்செய்து எண்ணிறந்த ஔஷதங்களைப் பிரயோகித்தும விஷம நீங்காமல் ஏழுவேகமும் முறையேபொங்கித் தலைகொண்டது. ஜீவிதங்குகிறதற்கு உரிய குறிகள் இல்லாமையால் விஷவைத்தியர்கள் கைவிட சுற்றத்தார்கள் அவள்மேல்விழுந்து அலறி அழுதார்கள். சிவநேசர் ஒருவாறுதெளிந்து, இந்த விஷத்தை நீக்கினவர்களுக்கு அளவிறந்த திரவியங்கொடுப்பேன் என்று பறை அறைவித்தார் மூன்றுநாள்வரையும் அரசிடத்துள்ளோர் முதலிய மந்திரவாதிகள் யாவரும்வந்து தங்கள் செய்கையினாலே மணிமந்திர அவுஷதங்களினால் முயர்ச்சித்தும் நீராமையால் திரும்பிவிட்டார்கள். சிவநேசர் அது கண்டு மயங்கி பின்பு, இவளை ஆளுடைய பிள்ளையாருக்கு என்று நிர்ணயித்தேனாகையால் நான் துன்புறவேண்டுவதில்லை என்று துன்பமநீங்கி, பிள்ளையார் வருமளவும் இவ்வுடலை தகனஞ்செய்து எலும்பையும சாம்பலையும் சேமித்து வைப்பேன் என்று துணிந்து அப்படியே தகனஞ்செய்த எலும்பையும் சாம்பலையும் ஓர்குடத்திலிட்டு, கன்னிமாடத்தில் வைத்து வஸ்திரஞ்சாத்தி ஆபரணங்கள் அணிந்து தினந்தோறுந் தவறாமல் மஞ்சனம், மாலை சந்தனம் அன்னம் விளக்கு முதலியவைகளை அமைத்து முன்போலத்தோழிமார்களைப் பாதுகாத்துவரும்படிச் செய்தனர். அதனை அறிந்த யாவரும் வியப்புற்றிருந்தனர்.

சோழநாட்டில் பன்னிரண்டு திருநாமங்கள் பெற்று விளங்குகின்ற சீகாழிப்பதியில், ஆதிசைவ அந்தணகுலத்தில், கவுணியர்கோத்திரத்தில் சிவபாதவிரதயரென்று ஓரந்தண சிகாமணியர் புறச்சமயிர்களால் சைவசமயத்திற்கு விளையும் இன்னல்களையும் பழிப்புகளையும் நீக்குவான் கருதி தம் அருங்காதலியாராகிய பகவதியாருடன் சிவபெருமானை நோக்கி ஓர்சற்புத்திரப்பேற்றை விரும்பிபன்னாள்பெருந்தவமுஞற்றக் கருணையங்கடலாஞ் சிவபெருமான் தன் திருக்குமாரரை நோக்கி காழிப்பதியிற் சிவபாதவிருதயருன்னியிருக்குங் கருத்தைத் தெற்றென விளக்கி யன்னார்க்குறிய தோரவாவையொழித்தும் அநேக அற்புத திருவிளையாடல்களைப் புரிந்தும் உலகர்க்குரியதோர் செம்மை வழியைக்காட்டியும் சின்னாள் கழியவிருந்துமீண்டு நம்மிடமே வரக்கடவையென்று தந்தையார் கூறிய சதுரவாசகங்களைச்செவியாரக் கேட்

டமைந்தராங்கந்தர்பகதியார்செய்தபண்டைத்தவத்தால் திருத்தோணியப்பர் திருவருளால் திருவாதிரைநட்சத்திரத்தில் ஆளுடையபிள்ளையார் திருவவதாரஞ்செய்தமூன்றாவதாண்டில், சிவபாதவிரதயருடன் தீர்த்தக்கரைக்குச் சென்று "அகமருடண" ஸ்நானஞ்செய்யும்போது பிதாவைக்காணாராகி அம்மே அப்பா என்று அழுதவுடனே, சிவபெருமான் தருமவிடைமேற்றோன்றிப் பிராட்டியைநோக்கி இக்குழவிக்குத் திருமுலைப்பால் கொடுவென, அம்மையார் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலுடன் ஞானமிர்தத்தையுங் கலந்து உண்பிக்க அழுகை தீர்ந்திருந்தனர். அகமருடணம் முடித்துவந்த தந்தையார்பாலருவாயரைப்பார்த்து உனக்குப் பாலூட்டினவர்யாரென்று அதட்டிக்கேழ்க்க பிள்ளையார் தமது கைவிரலாற்சுட்டி தோடுடைய செவியன் என்னும் தேவாரமோதி உமாசகிதரை விடைமேற்காட்ட அவர் ஆநந்தப்பரவசவயப்பட்டனர் அன்று முதல் ஆளுடையபிள்ளையார் திருஞானசம்பந்தசுவாமிகள் என்னும் திருநாமம்பெற்றனர். பின்பு தோணியப்பரைத் தரிசித்துத் திருக்கோலக்காவுக்குச்சென்று 'மடையில்வாளைபாயமாதரார் என்னுந்தேவாரமோதி. ஸ்ரீபஞ்சாக்ஷரம் அமையப்பெற்ற பொற்றாளம்பெற்று, அதைவிட்டுச் சிலதிவ்யதிருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவரத்துறையிற்சென்று எந்தையீசனெம்பெருமானேறமர் கடவுளென்றேத்தி என்னும் தேவாரமோதி "முத்துச்சிவிகை முத்துக்குடை முத்துச்சின்னம் முதலியவைகளைப்பெற்று அதைவிட்டுச்சிலதிவ்யதிருத்தலங்களைத்தரிசித்து மீண்டும் சீகாழிக்குச்சென்று உபநயனச்சடங்கு முடித்துக்கொண்டு, அங்குவிட்டுச்சில திவ்ய சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்து திருப்பாச்சிலாச்சிராமத்துக்கு வந்து "கொல்லிமழவன்" என்னும் பெயருடைய ஒரு அரசன் மகளுக்கு உண்டாயிருந்த "குமரகண்டவலியை" "துணிவளர் திங்கள் துலங்கி விளங்க" என்னும் தேவாரமோதி அவ்வலிநீக்கியருளி, அங்கிருந்து திருக்கொடிமாடச் செங்குன்றூருக்குச் சென்று வீற்றிருக்கும்போது அங்குண்டாய குளிர்சுரத்தை "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருநீலகண்டப் பதிகமோதித் தடுத்து, அங்கிருந்து சிலதிவ்யக்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பட்டீச்சுரத்துக்குச்சென்று "முத்துப்பந்தர்பெற்று" அங்குநின்றும் வழிக்கொண்டு இடையிலுள்ள திருப்பதிகளை எல்லாந்தரிசித்து சிவபாதவிரதயருக்கு யாகத்தின்பொருட்டுப் பொன்வேண்டுமென்று திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் பரமசிவத்தை "இடரினுந் தளரினுமெனதுறுநோய்" என்னும் தேவாரமோதி "உலவாக்கிழி" ஒன்றுபெற்றுத், தந்தையாரிடம் கொடுத்து

அவரைச்சீகாழிக்கு அனுப்பிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு சிலதிவ்யக்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, திருமருகலுக்குச்சென்று அங்கு சுவாமி தரிசனஞ்செய்து திரும்புகையில், விஷந்தீண்டிய ஓர் வணிகனை "சடையாயெனுமால்" "சரணியெனுமால" என்னும் தேவாரமோதி உயிர்பெறச்செய்து. அவனுக்கு மணஞ்செய்வித்து, அங்கிருந்து புறப்பட்டு பற்பல சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்து, விடைபெற்று, திருநாவுக்கரசு சுவாமிகளுடன் கூடித் திருவீழிமிழலைக் கெழுந்தருளி, "அரையார்விரிகோவண" என்னும் தேவாரமோதி, அங்குமழையின்றி பஞ்சமுண்டானபடியால், அடியார்பொருட்டு மேற்குபீடத்துப்பொற்காசு ஆளுடைஅரசும் கிழக்குபீடத்துப் பொற்காசு தாமுமாகப்பெற்று, அதுசெலலாதிருக்க வாசிதீரவே என்னும தேவாரமோதி விடைபெற்று மத்தியிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துத் திருமறைக்காட்டிற்கு வந்து, வேதம் பூசித்து மூடியகதவை ஆளுடையவரசுகள் திறக்க "சதுரம்மறைதான் றுதிசெய்து வணங்கும்" என்னும் தேவாரமோதி மூடி அங்கெழுந்தருளியிருந்தனர்.

அதைக்கேள்வியுற்ற குலச்சிறை நாயனாரும், மங்கையர்க்கரசியாரும் ஆளுடைய பிள்ளையாரை மதுரைக்கு வரவழைக்க அதற்கு அவரிசைந்து மந்திரியார் அமைத்துவைத்திருந்த திருமடத்தில் எழுந்தருளியபோது, சமணர்கள் அத்திருமடத்தில தீயிட்டனர். அதைக்கண்ட திருஞானசம்பந்தசுவாமிகள் செய்யனே திருவாலவாய் மேவிய என்னும் தேவாரமோதி அத்தீயைப் பாண்டியனுக்குச் சுரநோயாகச்செய்வித்து, பின்புஅங்கு சென்று கூன்பாண்டியனுக்கு நேரிட்டிருந்த சுரநோயை "மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு என்னும் திருநீற்றுப்பதிகம் பாடித்தீர்த்து, சமணருடன் அனல்வாதம், புனல்வாதஞ்செய்து எண்ணாயிரம் சமணரைக் கழுவேற்றி, அங்குள்ளார் யாவரையும் சைவசமயத்தவர்களாக்கித் திருவாலவாயுடையாரைத்தரிசித்து, திருத்தெளிச்சேரியின்கண் "புத்தநந்தியின்" தலையில் இடிவிழச்செய்து, அங்கும் சைவத்தை ஸ்தாபித்து. அங்கிருந்து புறப்பட்டு நடுநாட்டிலுள்ள சிவஸ்தலங்களையும், தொண்டைநாட்டிலுள்ள காஞ்சி முதலிய திவ்யக்ஷேத்திரங்களையும், அங்கிருந்தவண்ணமாக ஸ்ரீ கைலாசம், திருக்கேதாரம திருவனேகதங்காபதம், திருக்கோகரணம் முதலிய தலங்களுக்குத்தேவாரமோதித் துதிசெய்து. தலங்கள்தோறும் பூசித்துக்கொண்டுவரும் மலைமகள் புதல்வன் மயி

லேந்தியவள்ளல், இளையகுமாரன், தத்துவசித்தன், திரு[illegible]ாமகனார், இளையபிள்ளையார், முதலாயசிறப்புப்பெயர்கள் அமையப்பெற்றஆளுடையப்பிள்ளையார் திருககூட்டத்தோடு திருவொற்றியூரில்வந்துசுவாமிதரிசனஞ்செய்துக்கொண்டு இருக்கிறார் என்று அவ்வூரார்கள் பலர் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள் அவர் அவர்கள் எல்லாருக்கும் வஸ்திரங்களும் பொன்னுங்கொடுத்து, பெருக்களிப்புடையராகி திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தலிட்டு வஸ்திரங்களால் விதானித்து கமுகுகளும் வாழைகளும் நாட்டி தோரணங்கள் நிரைத்து கொடிகட்டி, மாலைகள் தூக்கி அலங்கரிப்பித்தார், பின்பு திருவொற்றியூர்ற்சென்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய திருவடிகளை வணங்குவேன் என்று எழுந்து, திருமயிலாப்பூரில் இருக்கின்ற சிவனடியார்களும் உடன் செல்லச்சென்று, திருவொற்றியூருக்குச் சமீபித்தார். அப்பொழுது ஆளுடையபிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று, திருமயிலாப்பூரை நோக்கி அடியார் கூட்டத்தோடு இருமருங்கும் நாட்டியங்கள் கவரி, குடை, ஆலவட்டம், அஷ்டமங்கலங்களும் பலவாத்தியங்கள் முழங்க எழுந்தருளிவந்தார் சிவநேசரும் சிவனடியார்களும் அடியார் திருக்கூட்டத்தைத் தூரத்திலேகண்டுசிவகுமாரராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வருகின்றார் என்று அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு, வியந்து நமஸ்கரித்தார்கள். ஆளுடையபிள்ளையார் அவர்களைத்தக்கபடி உபசரித்து, சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக்கேட்டு, திருமயிலாப்பூரை அடைந்தார். சிவநேசருடைய கருத்தை முற்றுவித்தற்கும் சமணரும் பௌத்தரும் ஆகிய புறச்சமயிகளுடைய இழிப்புரைகளை ஒழித்தற்கும் திருவுளங்கொண்டு, கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து, பரமசிவனை நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ்செய்து கோயிலுக்குப் புறத்திலேவந்து, சிவநேசரைநோக்கி உம்முடைய மகளினது எலும்பைநிறைந்த குடத்தைக்கோயிற் திருமேற்குப் புறமதில் திருவாயிலிலே கொண்டுவாரும் என்று அருளிச்செய்தார். சிவநேசர் பெருங்களிப்புடையராகி விழுந்து நமஸ்கரித்து எழுந்து தம்முடைய வீட்டை அடைந்து கன்னிமாடத்திலேபுகுந்து வெந்தசாம்பலும், எலும்பும் நிறைந்தகுடத்தை எடுத்து மூடிய இரத்தினச்சிவிகையினுள்ளேவைத்து, சேடியர் சூழ்ந்து செல்லும்படி எடுப்பித்துக்கொண்டு வந்து, கோபுரத்துக்கு எதிரே சிவிகையையிறக்கி அக்குடத்தை எடுத்து. சுவாமிக்கு அபிமுகத்திலே வைத்து நமஸ்காரம்பண்ணினார். திருமயிலாப்பூரில் இருக்கின்றவர்களும் மற்றையூர்களில் உள்ளவர்க

ளும், சமணர்முதலாகிய புறச்சமயிகளும் பார்க்கும்பொருட்டுப் பக்கத்திலே வந்து சூழ்ந்தார்கள் தேவர்கள் முதலியோர் ஆகாயத்திலே வந்து நெருங்கினார்கள். பசுகரணமின்றிச் சிவகரணமுடைய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், சர்வான்மாக்களுக்கும் உறுதிபயப்பித்தற் பொருட்டு, அடியார்திருக்கூட்டம் பக்கத்திலே தம்மைச்சூழ்ந்து வரும்படி கோபுரவாயிலின் நேரேவந்து பூம்பாவையினது அஸ்தியிருக்கின்ற குடத்தைக்கண்டு, சுத்தசாத்குண்ணிய சொரூபியாகிய பரமசிவனுடைய திருவருட்பெருமையைச் சிந்தித்து, இப்பூமியிலே இறந்தவர்களுடைய எலும்பைப் பின்னன்னெறிப்படுத்த அந்தன்மை அவ்வெலும்போடு தொடர்ச்சியாகும் என்று அருணோக்கினாலே பூம்பாவாய் என்று விளித்து,

மண்ணினிற்பிறந்தார் பெறும்பயன் மதிசூடு
மண்ணலா ரடியார்தம்மை யமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையாமெனி லுலகர்முன் வருகென வுரைத்தார்.

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
MADRAS.

பூமியிலே மானுடப்பிறப்பு எடுத்தவர்கள் பெறும்பயன் அன்புடனே பரமசிவனுடைய அடியார்களை அமுது செய்வித்தலும், சைவாகம விதிப்படிச் செய்யப்படுகின்ற அவருடைய திருவிழாவைத் தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாயின் இவ்வுலகோர்முன் வருவாயென்று, பிள்ளைப்பெருமான் அக்குடத்தைக் கருணையால் நோக்கி "மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலை" என்னும் முதற்றிருப்பாட்டால் எலும்பு எல்லாவுறுப்புகளையும் பெறச்செய்து மற்ற எட்டுத்திருப்பாடல்களாற்சிறந்த அழகோடு பன்னிருபிராயத்து அளவும் நிரம்பச்செய்து, பத்தாவது திருப்பாடலால் தாமரைமுகமலர்ந்து திருமகள் வெளிப்பட்டார்போலும் குடத்தை யுடைத்துக்கொண்டு அப்பூம்பாவையார் எழுந்தருளச்செய்து பதினோராவது பாடலால் திருக்கடைக்காப்புச் சாத்தித் தேவாரப்பதிக முடித்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருமயிலைத் திருப்பதிகம்.

—*—

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
னொட்டிட்ட பண்பி லுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தா
னைப்பசி யோண விழாவு மருந்தவர்க
டுய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியே பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச்சர மமர்ந்தா
னாதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய், 4

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சர மமர்ந்தா
னெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்

அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநா
ளொலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாட்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனு
முற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கு
மிருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். 10

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
றேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்த னலம்புகழ்ந்த பத்தும் வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. 11

225531

திருச்சிற்றம்பலம்.

தேவர்கள் பூமழை பொழிந்தார்கள், விஞ்சையர் முதலானோர் கீதம் பாடினார்கள், தேவதுந்துமிகளார்த்தன, சிவனடியார்களின் ஹரஹர முழக்கம் கடலொலியை அடக்கிவிட்டன. அக்காலத்து அங்கிருந்தார் யாவரும் திருஞானசம்பந்தசுவாமிகள் திருக்கோலத்தையும் அவரால் உயிர்பெற்றெழுந்த அங்கம்பூம்பாவையார் திருவழகையும் கண்டு (“ ஐந்து பேரறிவுங்கண்களே கொள்ள வளப்பருங்கரணங்க ணான்கும், சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்திருந்து சாத்விகமேயாக, இந்துவாழ்சடையானாடு மானந்தவெல்லை யிற்றனிப் பெருங்

கூத்தின், வந்தபேரின்ப வெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின் மலர்ந்தார்'') என்னும்திருவாக்கிற்கிசைய ஐம்புலவுணர்வுகளும் கண்கள் வழிப்பட்டு, அதனிடத்துத் தோன்றிய அந்தக்கரணங்கள் நான்கும் சிந்தைவழிப்பட்டு, அக்கரணங்களை விளக்கும் முக்குணங்களும் அவற்றுள் ஒன்றாகிய சாத்துவிக குணவழிப்பட்டு, அர்ப்புதபேரானந்த வெள்ளத்தில் முழுகிமகிழ்ச்சியடைந்து வீற்றிருந்தருளினார்.

உடனே அடைதற்கரிய பேறுபெற்ற அப்பூம்பாவையாரது தந்தையார் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை வணங்கித் தன்மகளை விவாகஞ்செய்துகொள்ளும்படி வேண்ட, அவர் 'யாம் உம்முடைய புத்திரிக்கு உயிர்தந்தமையால் பிதாவாகும் ஆதலால் தகாதெனமறுக்க' அங்கிருந்தோறு மதற்கிணங்கவே ஆளுடையபிள்ளையார் திருவடிகளைவணங்கித் தமது திருக்கன்னியாரைக்கொண்டு பிள்ளைப்பெருமானைப் பணிவித்துப்பின்னர் ஞானபோகமுண்டவரும் அங்கம் பூம்பாவையாரும் சிவநேசசெட்டியாரும், மற்றையரும் கபாலீச்சரமுடையாரைத் தரிசிக்கச் செல்லும்போது, இவ்வானந்த அற்புதக்கோலக் காட்சியைக்காண முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலாயினோருடன் திருநீலநக்கநாயனார், முருகநாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், சிவபாதவிரதயர், முதலாயுள்ள நாயன்மார் பலரும் அங்குவிரைந்தனர். சிவநேசர் கன்னிமாடத்திலேயே தன்மகளையிருத்தினர். பிறகு இருவரும் திருஞானசம்பந்தரையே தியானஞ்செய்து சிவசாயுச்சிய மடைந்தனர். பிறகு அங்கம் பூம்பாவையார் சரித்திரவைபவ உற்சவம் நடக்குங்காலத்தில அப்போது எழுந்தருளிய நாயன்மார்களுக்கும் உற்சவ நடத்தத் தொடங்கி பரம்பரையாகச் சிவபவமடைந்த நாயன்மார்களுக்கும் நடத்திவந்து, சுந்திரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிற்காலம் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும உற்சவம் நடத்திவருவதால் அறுபத்துமூவர் உற்சவமென்றுபெயர் வழங்கிவருகின்றது.

திருச்சிற்றம்பலம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

—*—

ஓம்.

ஸ்ரீபார்வதிபதயே நம:

பீஜாக்ஷர வர்ணமாலிகா

ஸ்தோத்ரம்.

ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ
ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவா.

1. அத்புதவிக்ரஹ அமராதீஸ்வர
அகணிதகணகுண அம்ருதசிவா. (ஸா)

2. ஆநந்தாம்ருத ஆஸ்ரிதரக்ஷக
ஆத்மாநந்த மஹேசசிவா. (ஸா)

3. இந்துகளாதர இந்த்ராதிபிரிய
ஸுந்தரரூப ஸுரேசசிவா. (ஸா)

4. ஈசஸுரேச மஹேசஜநபிரிய
கேசவஸேவித கீர்த்திசிவா. (ஸா)

5. உரகாதிபிரிய பூஷணசங்கர
நரகவிநாச நடேசசிவா. (ஸா)

6. ஊர்ஜிததாநவ நாசபராத்பர
ஆர்ஜிதபாபவிநாசசிவா. (ஸா)

7. ரிக்வேதாஸ்ரித மௌளிவிபூஷண
சந்திரார்காக்நி த்ரிநேத்ரசிவா. (ஸா)

8. ரூபமநாதி பிரபஞ்சவிலக்ஷண
தாபநிவாரண தத்வசிவா. (ஸா)

9. லிங்காதீஸ்வர ஸர்வஜ்ஞபிரிய
மங்களமூர்த்தி மஹேசசிவா. (ஸா)

10. லூதாதீஸ்வர ஸர்வபுதபிரிய
மங்களரூப மஹேசசிவா. (ஸா)

11. ஏகாநேகஸ்வரூப பிரியசிவ
வேதாந்தபிரிய வாஸசிவா. (ஸா)

12. ஐஸ்வர்யாஸ்ரய சிந்மயசித்கந
அச்சுதாநந்த மஹேசசிவா. (ஸா)

13. ஓம்காரபிரிய உரகவிபூஷண
ஹ்ரீம்காராதி மஹேசசிவா. (ஸா)

14. ஔஷஸலாலித அந்தககாசன
கௌரீஸமேத கிரீசசிவா. (ஸா)

15. அம்பரவாஸ சிதம்பரநாயக
அம்புருகாரத சேவ்யசிவா. (ஸா)

16. ஆஹாரபிரிய ஆதிகிரீஸ்வர
போகாதிபிரிய பூர்ணசிவா, (ஸா)

17. கமலாக்ஷார்சித கைலாசபிரிய
கருணாஸாகர காந்தசிவா. (ஸா)

18. கட்கசூலம்ருக டக்காத்யாயுத
விக்ரமரூப விஸ்வேசசிவா. (ஸா)

19. கங்காகிரிசுத வல்லபகுணஹித
சங்கரஸர்வ சுரேசசிவா. (ஸா)

20. காதகபஞ்ஜன பூதகநாசன
கௌரிஸமேத கிரீசசிவா (ஸா)

21. ஞானசுதஸ்தரி மௌளிவிபூஷண
வேதஸ்வரூப விஸ்வேசசிவா (ஸா)

22. சண்டவிநாசக சகலஜனப்பிரிய
மண்டலாதீச மஹேசசிவா. (ஸா)

23. சக்ரகிரீட சுகுண்டலசோபித
புத்ரபிரிய புவனேசசிவா. (ஸா)

24. ஜன்மஜராம்ருத நாசநகல்மஷ
ரஹிததாப விநாசசிவா. (ஸா)

25. ஜங்காராஸ்ரய ப்ருங்கிரிடபிரிய
ஓம்காரேச மஹேசசிவா. (ஸா)

26. ஞானாஞான விநாசகநிர்மல
தீநஜநபிரிய தீப்தசிவா, (ஸா)

27. டங்காத்யாயுத தாருணசத்வர
ஹ்ரீம்காராதி சுரேசசிவா. (ஸா)

28. டங்கஸ்வரூபா ஸஹகாரோத்தம
வாகீஸ்வர வரதேசசிவா. (ஸா)

29. டம்பவிநாச டிண்டிமபூஷண
அம்பரவாஸ சிதீசசிவா, (ஸா)

30 டம்டமட்டமருக தாரிநிஸ்சல
டுண்டிவிநாயக சேவ்யசிவா. (ஸா)

31. ணளிநவிமோசந நடநஜநப்ரிய
அளிகுளபூஷண அம்புருதசிவா. (ஸா)

32. தத்வமஸீத்யாதி வாக்கியஸ்வரூபக
நித்தியாநந்த மஹேசசிவா. (ஸா)

33. ஸ்தாவரஜங்கம புவனவிலக்ஷண
பாவுகமுனிவர சேவ்யசிவா. (ஸா)

34 தூதவிநாசந தளிதமனோன்மக
சந்தநலேபித சரணசிவா. (ஸா)

35. தரணீதரசுப தவளவிபாஸ்கர
லாவண்யாம்ருத லலிதசிவா. (ஸா)

36. நாகாமணிகண பூஷணநிர்குண
நடநஜநப்ரிய நாட்யசிவா. (ஸா)

37. பந்நகபூஷண பார்வதிநாயக
பரமாநந்த பரேசசிவா. (ஸா)

38. பாலவிலோசந புவநவிலக்ஷண
ஹாலாஹலதர அம்ருதசிவா, (ஸா)

39. பந்தவிநாசக ப்ருஹதீசாமர
ஸ்கந்தாதிப்ரிய கநகசிவா. (ஸா)

40. பஸ்மவிலேபக பவபயநாசந
விஸ்மயரூப விஸ்வேசசிவா. (ஸா)

41. மன்மதநாசந மதுபாநப்ரிய
மந்தரபர்வத வாஸசிவா, (ஸா)

42. யதிஜநஹ்ருதய நிவாசதயாஸ்வர
விதிவிஹ்ருண்யா சுரேசசிவா. (ஸா)

43. ராமேஸ்வராணீய முகாம்புஜ
ஸோமேஸ்வர ஸுக்ருதசிவா. (ஸா)

44. லங்காதீஸ்வர சுரகணசேவித
லாவண்யாம்ருத லலிதசிவா. (ஸா)

45. வரதாபயகர வாசுகிபூஷண
வநமாலாதி விபூஷணசிவா (ஸா)

46. சாந்தஸ்வரூபா சஹகாரோத்தம
வாகீஸ்வர வரதேசசிவா (ஸா)

47. ஷண்முகஜநக சுரேசமஹேஸ்வர
ஷாட்குண்யாதி மஹேசசிவா (ஸா)

48. சமசாராத்வய நாசநகல்மஷ
ரவிதாதாப விநாசசிவா. (ஸா)

49. ஹரபுருஷோத்தம அத்வைதாம்ருத
பூர்ணமுராரி சுரேசசிவா. (ஸா)

50. லாலிதபக்த ஜநேஸநிஜேஸ்வர
காளிநடநபிரிய காமசிவா. (ஸா)

51. க்ஷரரூபாதி பிரியான்விதசுந்தர
சாக்ஷீஜகத்ரய ஸ்வாமிசிவா. (ஸா)

ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ
ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவா,

பீஜாக்ஷர வர்ணமாலிகா ஸ்தோத்ரம்

ஸம்பூர்ணம்.

—*—

A. G. Press. Choolai. M S.

உ

சிவமயம்.

பிரதோஷமகிமை.

225531

ஒருகாலத்தில், தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலில் மந்தாரமலையை மத்தாகநட்டு, ஆதிசேஷனை நாணாகப்பூட்டிக் கடையும்போது அக்கடலில் பஞ்சதருக்களும், காமதேனுவும், இலட்சுமியும், சந்திரனும், வெள்ளையானையும், மற்றுமநேகமான திரவியங்களுமுண்டாயின. இவற்றையெல்லாம், தேவர்கள் கிரகித்துக்கொண்டார்கள். அப்போது ஆதிசேடன் உபத்திரவம் பொறுக்காமல் விஷத்தினைக்கக்கிவிட்டது. அவ்விஷம் எப்பக்கத்திலும் வீசச் சமீபத்திலிருந்த விஷ்ணு கறுத்துவிட்டனர். சிறிது தூரத்திலிருந்த பிரம்மன் புகைநிறமாயினர். உடனே தேவர்கள்பயந்து சிவபெருமானைநோக்கி முறையிட அவர் மனமிரங்கி அவ்விஷத்தினைக் கடுகளவாக்கித் திருவமுது செய்தருளிக் கண்டத்தினிறுத்திக்கொண்டனர். இவ்விஷமுண்டானகாலம் திரயோசி தினம் இரஜனி முகவேளை அதாவது மஞ்சள் வெயில்காய்கிற சாயங்காலம். இக்காலமே பிரதோஷகாலம்.

இப்பிரதோஷ காலத்தில் தேவர்கள் முதலியவர்கட்கு இடபவாகனரூடராய் சூலஞ்சுழற்றி யொருசாமம் திருநடனஞ் செய்து அனுக்கிரகித்ததென்றும், அஸ்தமித்த மூன்றே முக்கால்நாழிகையாகிய பிரதோஷகரலம் பார்த்த சிவதரிசனத்திற்குப் பரியாய பட்சகாலமெனவும் சொல்லப்படும். இப்பிரதோஷ காலநிர்ணயமானது சிவாலயங்கட்கும், சிவதரிசனம் பண்ணுகிரவர்களுக்கும், விரதமனுட்டிப் பவர்கட்கும், ஆத்மார்த்த பூசை பண்ணுகிறவர்கட்கும் விதித்திருக்கின்றது. பிரதோஷகாலத்தில் பிரம்விஷ்ணுமுதலிய தேவர்களெல்லோரும்சிவபெருமான் சந்நிதியிலிருப்பார்களாகையால், அந்தவேளையில் சிவபெருமான் ஆலயத்தை நீங்கி வேறு ஆலயத்திர்க்குப் போகிறவர்கள் நரகத்தினையே யடைவார்கள். விநாயகர், சுப்பிரமணியர்; அமபாள் இவர்கட்கும் சிவபெருமானுக்கும் சிறிதும் பேதமின்மையால் இவ்வாலயங்கட்குப் பிரதோஷகாலத்தில் போய்த்தரிசிக்கலாம். இப்பிரதோஷகாலத்தில் சிவாலயத்தில் ஒருதீபமேற்றி வைக்கின்ற வர்களடைட்யும் பலனை அம்மம்ம ! ஆதிசேடனாலும் சொல்லமுடியாதெனின் அனேகதீப

...வார் அடையும்பலனை யாரெடுத்துச்சொல்லவல்லவர் ...வே விளங்குவார்களே யல்லது வேறில்லை. பிரதோஷகால ...பெருமான் கழுத்தில் ஒருமாலையிடுவோர் சிவசாயுச்சிய ... பிரதோஷகாலத்தில் நந்திதேவராகிய இடபதேவருடை ...கொம்பு ...ளின் மத்தியில் சிவலிங்கதரிசனஞ் செய்தல்வேண் ...மண்டகாலம சனிக்கிழமையானதினால், சனிப்பிரதோஷம் ... சிறப்புடைத்து பிரதோஷகாலத்திலே மகருத்திரமகாப் பிர ...ணம செய்ய வேண்டும்.

அதாவது முதலில் நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு, அங்கிரு ந்தவண்ணமே இடமாகச்சென்று சண்டேசுர நாயனாரைக் தரிசித்துச் செல... திரும்பிவந்து மறுபடி நந்திதேவரைத்தரிசித்து, பின்பு சி... தரிசனஞ்செய்யவேண்டும். இவ்வாறு ஒருபிரதட்சணஞ்செய்தால் ... ஒருவன் இவ்விரதத்தினை எக்காலமும் அனுஷ்... அவனுக்கு மறுசென்மமில்லை. ஒருவன் தான் வாழும் ஊரிலுள்ள சிவாலயத்தில் பிரதோஷ தரிசனம் செய்யாது அன்னம் உண்ணுவானேயானால் அவ்வன்னம் மலத்துக்குச்சமானமாகும். அவனுக்கு ஆபத்துகள் அடிக்கடி நேரிடும். நாளுக்குநாள்குடும்பம் க்ஷீணித்துவிடும். முடிவில் அவமானமான மரணவேதனைப்பட்டு இறந்தபின் நரகத்தினையேயடைவன். பிரதோஷத்தினைத்தன்னாலியன்றளவு திரவியசகாயத்தால் நடத்துபவனும், அதற்கு உதவிசெய்பவனும், அக்காலத்தில் தீபம் வைப்பவனும், அக்காலத்தில் தரிசிப்பவனும் அடையும்பலன் ஒரு சிவாலயத்தினை நூதனமாகப் பிரதிஷ்டை செய்ததனாலுண்டாகிய பெரும் புண்ணியத்தினையடைவார்கள். இத்தகைய அருமையான உயர்ந்த பிரதோஷத்திற்கு இடையூறு செய்பவர்கள் அடையும் கதியினை இவ்வளவெனச் சொல்லமுடியாது, கோடானுகோடிகாலம் நரகத்தில் வீழ்ந்து துன்பத்தையே யனுபவிப்பர், ஒருவனுக்கு நல்லமனைவி வேண்டுமாயினும், புத்திரர் வேண்டுமாயினும், செல்வம் வேண்டுமாயினும் பிரதோஷ தரிசனமே செய்துவரல்வேண்டும். சுபம்.

வாழி.

வள்ளிதெய்வானையுடன் வருமுருகனடிவாழி
பள்ளிம்பியிலேறிவரும் புண்ணியன்றனடிவாழி
வள்ளியவேலேந்துவநமயிலனடிவாழி
துள்ளியசேவற்கொடிசேர்சுந்தரனடிவாழி.

225531

பணமிஹளிகுறவஞ்சிநாடகம்	0	5	0
சயநாடகம்	0	5	0
கர்ணநாடகம்	0	5	0
மாணிக்கநாடகம	0	5	0
சுந்தரிமாலேபிநாடகம்	0	8	0
பவளக்கொடிநாடகம்	0	5	0
துளசிதாசர்நாடகம்	0	5	0
ஏணியேத்தநாடகம்	0	5	0
அரக்குமாளிகைநாடகம்	0	5	0
அறுபத்துமூவர் உற்சவவைபவச் சுருக்கம்	0	1	0
ஆஞ்சிநேயர்ஜனனம்	0	2	0
ஷை கீர்த்தனை	0	2	0
மூளிகர்வபங்கம்	0	3	0
ஷை 2-பாகம்	0	3	0
நற்குலசேகரி 1-பாகம்	0	4	0
ஷை 2-பாகம்	0	4	0
மருமக்கள் துயரம	0	2	0
ஷை கும்மி	0	2	0
சதாரம்	0	3	0
தாராசசாங்கம்	0	3	0
வள்ளிபமமை சுபவரம்	0	3	0
கண்டிராத நாடகமென்னும் பார்சி சரசபூஷணன் சரித்திரம்	0	4	0

எமது விலாசம்

வா. முத்துகிருஷ்ண முதலியார்

நெ, 60. காளத்தியப்பமுதலி தெரு

வேப்பேரி போஸ்டு.